MAY 2023 **U/ID 30621/UCL4B**

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

கீழ் வரும் வினாக்களுள் எவையேனும் பத்திற்கு மட்டும் 30 சொற்களில் விடை தருக.

1. இலக்கணக் கொத்து நூலின் ஆசிரியர் யார்?

2. 'நிகண்டு' என்பது யாது?

3. 'பிராணாயாமம்' - குறிப்பு தருக.

4. மேலைநாட்டுக் கிறித்துவர்களில் தத்துவப் போதகர் என அழைக்கப்பெற்றவர் யார்?

5. உரைநடையின் வகைகள் யாவை?

6. பாரதிதாசனின் படைப்புகளைக் கூறுக.

7. 'கவிஞரேறு' என்று பட்டம் பெற்றவர் யார்?

8. வானம்பாடி படைப்பாளர்கள் சிலவற்றைக் கூறுக.

9. இசையின் வகைகள் யாவை?

10. சிறுகதை - விளக்கம் தருக.

11. கால்டுவெல்லின் உரைநடை நூல்களைக் கூறுக.

12. இதழின் பொதுப் பணிகள் யாவை?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

கீழ்வரும் வினாக்களுள் எவையேனும் ஐந்திற்கு மட்டும் 200 சொற்களில் விடை தருக.

13. பன்னிரு பாட்டியலின் நூல் அமைப்பினை விளக்குக.

14. சித்தர்களின் யோகநெறி முறைகளை எழுதுக.

15. உரைநடை வேறுபாட்டிற்கான காரணங்களை விளக்குக.

16. தெருக்கூத்து நாடகங்கள் பற்றி விளக்குக.

17. இதழ்சாரா எழுத்தாளர்களைப் பற்றி விவரிக்க.

18. வீரமாமுனிவரின் உரைநடைப் பணியை விளக்கி எழுதுக.

19. இதழின் பயன்கள் யாவை?

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

கீழ்வரும் வினாக்களுள் எவையேனும் மூன்றிற்கு மட்டும் 500 சொற்களில் விடை தருக.

20. அகராதிகளின் வருகையும் நிகண்டுகளின் வீழ்ச்சிக்கான காரணங்களையும் தொகுத்து உரைக்க.

21. 19-ம் நூற்றாண்டின் உரைநடையின் வளர்ச்சிப் பணிகளை விவரி.

22. புதுக்கதையின் தோற்றமும் வளர்ச்சி குறித்துக் கட்டுரை வரைக.

23. கிறித்தவத் தமிழ்ப் பணியில் விளைந்த தமிழ் மறுமலர்ச்சியைத் தொகுத்து எழுதுக.

24. பெண் சிறுகதை எழுத்தாளர்களின் பங்கினை விவரி.

———————